DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : சரவணகுமார் | Father/Husband Name : பாலசுப்பிரமணியன் |
| Age : 38 | Village : அம்மையார்பட்டி |
| Taluk : | Calling : ஓட்டுநர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Feb 17, 2026

(Accused Present)

**<u>முதல் விசாரணை</u>** :-

1. நான் அம்மையார்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுநராக பணி செய்து வருகிறேன்.

2. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும், அவர் என்னுடைய அக்கா (அ.சா.1) கணவர் ஆவார். 2022 ஆம் ஆண்டிலிருந்து ஆஜர் எதிரி மது அருந்தி வந்து என்னுடைய அக்காவை அடித்து துன்புறுத்தினார். 21.04.2022 ஆம் தேதி என்னுடைய அக்கா ராஜேஸ்வரி வீட்டு அருகே உள்ள என்னுடைய தங்கை மகேஸ்வரி வீட்டில் நான் இருந்தபோது, மாலை சுமார் 05.10 மணியளவில் சத்தம் கேட்டது. என்னுடைய தங்கை வீட்டில் இருந்து நான் பார்த்தபோது ஆஜர் எதிரி என்னுடைய அக்கா ராஜேஸ்வரியின் தலை முடியை பிடித்து ஆஜர் எதிரி அவருடைய வீட்டிலிருந்து வெளியே இழுத்து வந்தார். அதை பார்த்ததும் நான் அருகே சென்று கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி என்னுடைய அக்கா ராஜேஸ்வரியின் முதுகில் கையை வைத்து இரண்டு குத்து குத்தினார். மேலும், தேவிடியா பலவட்டரை என்று ஏசி கொண்டே இருந்தார்.

3. நான் என்னுடைய அக்காவிடம் என்ன பிரச்சனை என்று கேட்டபோது, எதிரி தினந்தோறும் மது குடிக்க பணம் கேட்டு பிரச்சனை செய்து கொண்டே இருப்பதாக கூறினார்.மேலும் என்னுடைய அக்காவை அங்கிருந்து அழைத்து செல்லுமாறு கூறினார். நான் என்னுடைய அக்காவை வீட்டிற்கு செல்லுமாறு கூறிய போது தினமும் பிரச்சனை செய்து கொண்டிருப்பதால் வீட்டிற்கு செல்ல மாட்டேன் என்றும், அவருக்கு வலி அதிகமாக இருப்பதால் ஊசி போட அழைத்துச் செல்லுமாறும் கூறினார். என்னுடைய அக்காவை நான் செவல்பட்டியில் உள்ள சரவணா மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். 22.04.2022 ம் தேதி வெம்பக்கோட்டை காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** –

4. நான் ஓட்டுனராக செவல்பட்டியில் உள்ள பயர் ஆபீஸில் வேலை செய்து வருகிறேன். நான் எத்தனை மணிக்கு வேலை முடிந்து வருவேன் என்றால் காலை 9:30 மணிக்கு எனக்கு வேலை முடிந்துவிடும், அதற்குப் பிறகு மாலை 05.30 மணிக்கு தான் நான் வேலைக்கு செல்வேன். பொதுவாக எத்தனை மணிக்கு ஃபயர் ஆபீஸில் வேலை முடியும் என்றால் மாலை 5:30 முதல் 5:45 மணிக்கு முடியும். நான் எத்தனை மணிக்கு அங்கு இருக்க வேண்டும் என்றால் மாலை 5:30 மணிக்கு இருக்க வேண்டும், 06.00 மணிக்கு வாகனத்தை எடுக்க வேண்டும். என்னுடைய வீட்டிலிருந்து நான் வேலை செய்யும் ஃபயர் ஆபீசுக்கு செல்ல எவ்வளவு நேரம் ஆகும் என்றால் 1.5 கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது. பொதுவாக பயர் ஆபீஸ் பொதுமக்கள் குடியிருக்கும் ஊர் பகுதியில் இருந்து 1.5 கிலோமீட்டர் பக்கத்தில் இருக்காது என்றால் சரியல்ல. நான் ஃபயர் ஆபீஸில் வேலை செய்வதால் முழு நேரமும் அங்கு தான் இருக்க வேண்டும் என்றாலும் காலை 9.00 மணிக்கு வீட்டுக்கு வந்து விடுவேன் என்று வழக்கிற்காக பொய்யாக

கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

5. சாட்சி கணேஷ்குமார் என்னுடைய அக்கா மகன் ஆவார், சாட்சி திருமலை குமரன் என்னுடைய சித்தப்பா ஆவார். என்னுடைய அக்காவிற்கும் எதிரிக்கும் நடைபெற்ற திருமணத்திற்கு நான் செல்லவில்லை என்றால் சென்றேன். என்னுடைய அக்காவிற்கு எத்தனை குழந்தைகள் என்றால் இரண்டு பெண் குழந்தைகள் மற்றும் ஒரு ஆண் குழந்தை ஆகும். அவர்களில் யாருக்கெல்லாம் திருமணம் முடிந்து உள்ளது என்றால் முதல் பெண் மகள் காதலித்த நபரை அழைத்து சென்று திருமணம் செய்து கொண்டார். நாங்கள் அந்த திருமணத்திற்கு செல்லவில்லை. இரண்டாவது பெண் மகளுக்கும் திருமணம் ஆகிவிட்டது, அவரும் விரும்பிய நபரை திருமணம் செய்து கொண்டார். எதிரி அவருடைய முதல் மகளுடன் தான் தற்போது வசித்து வருகிறார் என்றால் இல்லை. எதிரியின் முதல் மகளை விசாரித்தார் எதிரி தற்போது அவருடன் வசித்து வருகிறாரா என்பது தெரியும் என்றால் சரிதான்.

6. என்னுடைய வீடு எதிரியின் வீட்டிலிருந்து இரண்டு தெரு தள்ளி இருக்கிறது. வழக்கு சம்பவம் நடைபெற்றதாக கூறும் நேரத்தில் அங்கு சுமார் பத்து நபர்கள் கூடி இருப்பார்கள் என்றால் சரிதான். சம்பவம் சுமார் ஒரு மணி நேரம் நடந்திருக்குமா என்றால் 20 நிமிடங்கள் நடந்திருக்கும். வழக்கு சம்பவம் நடைபெற்றதாக கூறும் நேரத்தில் நான் எதிரியை தடுக்க சென்றேனா என்றால் இல்லை. வழக்கு சம்பவம் நடைபெற்ற விபரம் என்னுடைய அக்கா கூறி தான் எனக்கு தெரியும் என்றால் நான் சம்பவ இடத்தில் தான் இருந்தேன். நான் சம்பவ இடத்தில் இருந்தது என்றால் சம்பவத்தை தடுக்க சென்று இருப்பேன் என்றாலும், இந்த வழக்கில் புகார் கொடுத்தது என்னுடைய உடன்பிறந்த அக்கா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

7. நான் எப்பொழுது வீடு கட்டினேன் என்றால் 2011 ஆம் ஆண்டு கட்டினேன். அந்த வீட்டை எதிரி தான் எனக்கு கட்டிக் கொடுத்தார் என்றால் அவர் கொத்தனாராக வேலை செய்து வருவதால் அவருக்கு கீழே வேலை செய்யும் நபர்களை வைத்து கட்டிக் கொடுத்தார். நான் என்னுடைய வீடு கட்டும் போது எதிரியிடம் ரூபாய் 5,00,000/- கடன் வாங்கி இருந்தேன் என்றாலும், அந்த கடனை திருப்பி கேட்ட போது தான் பிரச்சனை ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. நான் என்னுடைய அக்காவின் திருமணத்திற்கு செல்லவில்லை என்றாலும், எதிரி எனக்கு கொடுத்த பணத்தை திருப்பி கேட்ட போது எங்களுக்குள் வாய் தகராறு ஏற்பட்டது என்றாலும், அதனால் நான் என்னுடைய அக்காவை எதிரியுடன் வாழ விடாமல் செய்கிறேன் என்றாலும் சரியல்ல.

8. வழக்கு சம்பவம் நடைபெற்றதாக கூறும் தேதிக்கு முன்பாகவே எதிரியும் என்னுடைய அக்காவும் பிரிந்து தான் வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரியல்ல, ஒன்றாக தான் வாழ்ந்து வந்தார்கள். என்னுடைய அக்கா மகளை விசாரணை செய்தால் வழக்கு சம்பவம் நடைபெற்றதாக கூறும் தேதிக்கு முன்பாகவே என்னுடைய அக்காவும் எதிரியும் பிரிந்து வாழ்ந்தார்களா என்பது தெரியும் என்றால் சரிதான்.

9. எத்தனை மணிக்கு நான் என்னுடைய அக்காவை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்றால் நான் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவில்லை, என்னுடைய தம்பி தான் அழைத்து சென்றார். அவர்கள் எந்த மருத்துவமனைக்கு சென்றார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் நான் அவர்களை சரவணா மருத்துவமனைக்கு செல்லுமாறு கூறிவிட்டு வண்டிக்கு சென்று விட்டேன். என்னுடைய தம்பி என்னுடைய அக்காவை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாக கூறும் விபரத்தை போலீசார் என்னை விசாரித்த போது கூறவில்லை என்றால் அது பற்றி கேட்கவில்லை என்பதால் கூறவில்லை. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், அதனால் தான் மேற்படி விபரத்தை போலீசார் என்னை விசாரித்த போது கூறவில்லை என்றாலும் சரியல்ல, சம்பவம் மாலை 05.20 மணிக்கு முடிந்து விட்டதால், நான் என்னுடைய அக்காவை எங்களுடைய வீட்டில் விட்டுவிட்டு, நான் வேலைக்கு சென்று

விட்டேன்.

10. என்னுடைய தம்பி கணேஷ்குமார் எத்தனை மணிக்கு வந்தார் என்றால் அதை நான் பார்க்கவில்லை, அப்பொழுது நான் வேலையில் இருந்தேன். என்னுடைய தங்கை மகேஸ்வரி வீடு என்னுடைய அக்காவின் வீட்டில் இருந்து எத்தனை வீடு தள்ளி இருக்கிறது என்றால் இரண்டு வீடு தள்ளி இருக்கிறது. அவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய அக்காவிற்கு மருத்துவமனையில் என்ன சிகிச்சை அளிக்கப்பட்டது என்பது தொடர்பாக என்னிடம் என்னுடைய அக்கா எதுவும் கூறினாரா என்றால் இல்லை. நாங்கள் மருத்துவமனையில் இருந்து வந்ததும் காவல் நிலையத்திற்கு சென்றோம் என்றால் மறுநாள் காலை சுமார் 9.00 மணிக்கு சென்றோம். வழக்கு சம்பவம் நடைபெற்ற உடனையே சம்பவ இடத்திற்கு போலீசார் வந்து விட்டார்கள் என்றால் சரிதான். அப்பொழுது போலீசார் என்ன நடந்தது என்பதை எழுதி வாங்கிக் கொண்டார்கள் என்றால் நான் அந்த சமயம் அங்கு இல்லை.

11. காவல் நிலையத்திற்கு யாரெல்லாம் சென்றோம் என்றால் என்னுடைய அக்கா ராஜேஸ்வரி, அவருடைய மகன் கணேஷ் குமார் மற்றும் நான் ஆகிய மூன்று பேரும் சென்றோம், நான் காவல் நிலையத்திற்குள் செல்லவில்லை. என்ன புகார் கொடுத்தார் என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மகேஸ்வரியை இந்த வழக்கில் சாட்சியாக விசாரணை செய்தால் உண்மையிலேயே வழக்கு சம்பவம் நடைபெற்றதா? என்பது தெரியும் என்றால் சரிதான். மகேஸ்வரியின் வீடு ராஜேஸ்வரியின் வீட்டிற்கு எந்த பக்கம் இருக்கிறது என்ற வடக்கு பக்கம் இருக்கிறது. ராஜேஸ்வரியின் வீட்டிற்கு கிழக்கு பக்கம் யார் வீடு இருக்கிறது என்றார் என்னுடைய சித்தப்பா பாஸ்கர் என்பவரின் வீடு இருக்கிறது. வழக்கு சம்பவம் நடைபெற்ற சமயத்தில் அவர்கள் அங்குதான் இருந்தார்கள் என்றால் வீடு இருக்கிறது, அந்த சமயத்தில் அவர்கள் அங்கு இல்லை. அவர்களை விசாரித்தால் சம்பவம் நடைபெற்றதா என்பது தெரியும் என்றால் அவர்கள் அப்பொழுது அங்கு இருந்தார்களா என்று நான் பார்க்கவில்லை.

12. நான் கூறுவது போல் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், ஆஜர் எதிரி என்னுடைய அக்காவை ஆபாசமாக பேசி தாக்கவில்லை என்றாலும், எனக்கும் எதிரிக்கும் இடையே உள்ள முன் விரோதத்தை மனதில் வைத்து நான் எதிரிக்கு எதிராக, என்னுடைய அக்கா கொடுத்த புகார் மனுவில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Feb 17, 2026 5:09 PM

Judicial Magistrate 2, Sattur